ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சி௵ ஆனி௴ 1924௵ ஜூன், ஜூலை௴	சஞ்சிகை 3.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

உயிர் நீங்குமுன் பிறர்க்குக் கொடுத்துண்டல்
வேண்டுமெனல்.

"கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணு
ளதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே யென்கின்றீ ராங்கதற்குப்
பருவ மன்றென்
செய்கோ வெனச் சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்தவெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே கொடுத்
துண்டல் புரிமின்கண்டீர்."

(இ-ள்.) ("புருஷர்களே! நீங்கள் பேச முடியாமல் நாவடங்கி யிறக்குந் தருணத்தில், முன்னே தேடி முடிப்புக் கட்டி மனைவியிடம் கொடுத்து வைத்திருந்த பொருளை, உமக்குரியார்க்குப் பங்கிட்டுக் கொடுக்கக் கருதிக்கொண்டு வரும்படி) அந்தப் பொருள் முடிப்பினளவைக் கையாற் காட்ட, சேல்மீனை நிகர்த்த கண்ணினை யுடையவளாகிய அம்மனையாள், அந்தப் பொருளைத்தான் மாத்திரம் (அபகரித்துக்கொள்ள நினைத்து) காட்டாதவளாய், ஐயா! இத்தருணத்தில் உண்ணுதற்கு விரும்பி விளாம்பழமென்று அதனைக் கொண்டுவருமாறு கையாற் குறிப்பிடுகின்றீர்; இப்பொழுதுமக்கு விக்குள் மேலிட்டிருப்பதால் அக்கனியைத் தின்னுதற்குச் சமயமன்று; ஐயோ! நான் என் செய்வேன் என்று பாசாங்குசெய்து உமக்கு அன்பிற் சிறந்தவள்போல நடித்து நீங்கள் குறித்த எல்லாவற்றிற்கும் அங்கே அவளுடைய சிறப்பில்லாத பொய் வார்த்தையாலே மாறுபாடான அர்த்தம் சொல்லி உங்கள் கருத்தை மறைப்பதற்கு முன்னே, உங்களிடமுள்ளவற்றைப் பிறர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துண்பதை விரும்புவீராக" என்பதாம்.

ஒருவன் நாவடங்கி இறந்துபோகுந் தருணத்தில், தன் மனைவியிடம் கொடுத்து வைத்திருந்த பொருள் முடிப்பை, தனக்குரிய பலர்க்கும் பங்கிட்டுக் கொடுக்க வெண்ணிக் கொண்டுவரும்படி கையைக்குவித்து அப்பொருள் முடிப்பைக் காட்ட, அவள், அப்பொருளைத் தான்மாத்திரம் அபகரிக்கக் கருதித் தன் புருஷன் கருத்தைப் பிறர் உணர்ந்து கொள்ளாதபடி, அவர் கையைக் குவித்

துக் காட்டி விளாம்பழம் கேட்கின்றாரென்று சொல்லிவிட்டு; அவனை நோக்கி, ஐயோ! விக்குள் மேலிட்டிருக்கும் இத்தருணத்தில் விளாம்பழம் கேட்கின்றீரே! அதைத் தின்னக்கூடாது என்று சொன்னதாக ஒரு கதை யுண்டு. ஒருவன் இறக்குந் தருணத்தில் அவனுடைய மனைவி முதலியோர் இத்தகைய வஞ்சனைகளைப் புரிவது இயற்கையாதலின் இக்கதையை எல்லோரிடத்தும் நிகழ்வதாகக் கூறினார் ஆசிரியர். இச்செய்யுட் கருத்தாவது:—நீங்கள் நல்ல எண்ணத்தோடு பின்னால் அறத்தைச் செய்யலாமென்று பொருளைத் தேடி வைத்திருப்பினும் மரணத்தறுவாயில் மனைவி முதலியோரால் உங்கள் எண்ணத்திற்கிடையூறுண்டாகும். ஆதலின், மரணங்குறுகுவதற்குள், பொருளைப் பிறர்க்குக் கொடுத்துண்டு அறத்தைத் தேடிக் கொள்ளுங்கள் என்பதாம். கண்டிர்-அசை.

(சீவகசிந்தாமணி 1553)

"திரைகடலோடியுந் திரவியந்தேடு"

இதன்பொருள்:—"திரை-அலைகளையுடைய, கடல்-சமுத்திரத்தின்மேல், ஓடியும்-(கப்பலேறி) விரைந்து சென்றும், திரவியம்-பொருளை, தேடு-சம்பாதித்துக்கொள்" என்பதாம்.

உலகத்தில் மானிடராய்த் தோன்றியவர், முக்கியமாக அடைய வேண்டியவை: அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்குமாம். இவற்றுள் பொருள்தான் பிரதானமானது. முதலில் பொருளைத் தேடிக்கொண்டால் மாத்திரந்தான் இன்பத்தை அடையலாம்; அறத்தைத்தேடலாம்; அதன் உதவிகொண்டு முத்தியையும் அடையலாம். பொருளில்லாவிடில் இவ்வுலகத்தில் எவ்வித இன்பத்தையும் அடைதல் முடியாது; இதுபற்றியே திருக்குறளாசிரியரும்,

> "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
> தீதின்றி வந்தபொருள்."

என்றும்,

> "அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
> கிவ்வுலக மில்லாகி யாங்கு."

என்றும் கூறினார். ஆதலின், ஒவ்வொருவரும் பிரயாசைப்பட்டாயினும் நல்லவழியில் பொருள்தேட முயலவேண்டும். ஊக்கமுடையார்க்கே பொருள்கைகூடும். எல்லாம் தலைவிதிப்படியே நடக்கும்; நாம் என்ன முயற்சிசெய்தாலும் நற்கால மில்லாவிடில் ஒன்றும் கைகூடாது; நாம் வீட்டிற்குள்ளிருந்தாலும் நல்ல அதிர்ஷ்டமிருந்தால் பொருள் தானே வந்துசேரும் என்று மூடஞானம் பேசிக்கொண்டு சோம்பியிருப்பார்க்குத் தரித்திரம் அகலாது; ஒருசுகமும் இராது. நல்லதிர்ஷ்டத்தால் பொருள்சேர்வது உண்மையே எனினும், 'முயற்சி திருவினையாக்கும்' என்றபடி செய்த முயற்சியளவிற்குத் தக்கபடி ஜீவிப்பதற்குப் போதிய பலனாவது கிடைக்காமற் போகாது. அதுவுமில்லாதிருப்பார் வறுமையையே அநுபவிப்பார் ஆதலின் எஃதெப்படி யிருந்தபோதிலும் பொருள்தேடும் முயற்சி

யை மட்டும் கைவிடலாகாது. பயன் சிறிதாயினும் பெரிதாயினும் முயற்சியை மாத்திரம் கைவிடாதிருந்தால் நாளடைவில் பெரியபயன் சித்தித்தல் கூடும்.

"இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரு மூர்வர்களி றேடைநுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்சென்
றம்மைவினை கொந்துபுலந் தூடலுணர் வன்றே.

உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு காளே
வெள்ளநிதி வீழும் விளை யாததனி னில்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின் மடிநிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே"

என்றார் சிந்தாமணியாரும். இவற்றையெல்லாம் நன்கு ஆராயுமிடத்து இடைவிடா முயற்சியுடையார்க்குப் பொருள் கைகூடுமென்பதும், அப்பொருளால் சகல இன்பங்களு மெய்துமென்பதும் உணரப்படும். ஆகவின், ஒவ்வொருவரும் ஔவையார் கூறிய நீதிப்படி கப்பல்யாத்திரை செய்தாவது பொருளைத்தேடி இன்புறுவாராக.

(திருவருட்சகாயம்.)

சித்தாமூர் மடாதிபதியவர்கள் பிரிவாற்றுமை.

இரத்தாக்ஷி வருஷம் ஆனிமாதம் 20ௗ (3-7-24) வியாழக்கிழமை மாலை 4. மணிக்கு சித்தாமூர் ஸ்வஸ்தி ஸ்ரீமதபிநவ லக்ஷ்மிசேன பட்டாரக சுவாமியார் அவர்கள் பரமபத மடைந்ததைக் கேள்விப்பட்டு மிக்க மனத்துயர மடைகின்றோம். இப்படியே ஸ்ராவகர்களெல்லோரும் மனங்கரைந்துருகுவார்களென்பதில் ஐயமில்லை. சுவாமிகள் ஜீவியகாலத்தில் நம் ஜைன சமூகத்தாருக்குச் செய்துவந்த நன்மைகளை நினைக்குந்தோறும் கல்லுங்கரையும். இவர்கள் செய்துவந்த அரும்பெருங் காரியங்களில் கோவில் திருப்பணியானது எவராலும் செய்தற்கு இயலாதகாரியம். இப்பேர்ப்பட்ட காரியம் பூர்த்தியாவதற்கு முன் சுவாமிகள் பிரிந்ததானது ஆராத்துயரத்தை யுண்டுபண்ணிக்கொண் டிருக்கின்றது. இன்னும் இவர்கள்செய்ய நாடியிருந்த தர்ம கைங்கரியங்களோ எண்ணில. இவற்றையெல்லாம் நிறைவேறவொட்டாமல் சுவாமிகளைப் பிரித்து விட்டது ஸ்ராவகர்களின் துர் அதிர்ஷ்டமேயாகும். ஆதலின் இவர்கள் பிரிவாற்றுமையைக் குறித்துச் சில இரங்கற்பாக்களைக் கூறி நம்மனத் துயரத்தைத் தணிவித்துக் கொள்வோமாக.

இரங்கற்பாக்கள்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. எத்தேச மும்புகழ என்றென்றும் பெருவளத்தோ
டிலகு நல்ல
சித்தாமூர்க் கணிமெயன்னத் திகழுமடா லயத்தினதி
பதியாய்ச் சேர்ந்து
முத்தாரும் முக்குடைக்கீழ் முதல்வனடி போற்றியறம்
மொழிந்து பேரின்
பத்தாரும் லக்ஷ்மிசே னகபட்டா சாரியராம்
பண்புள் ளாரே.

2. அன்பினொடு சிராவகர்க்கு நல்லுபதே சம்புரிந்திங்
கறத்தைப் பேணி
முன்பொருவ ரும்புரியாத் தேவால யப்பணியும்
முயன்று செய்தீர்
இன்புறுமத் திருப்பணிதான் முடியாமுன் பரமபத
மெய்தி விட்டீர்
என்குறித்திவ் விதஞ்செய்தீர் எமதுகுரு சுவாமியதை
இயம்பு வீரே.

3. புண்ணியஞ்சேர் உம்முடைய நற்செயலும் களங்கமற்ற
புனித நெஞ்சும்
எண்ணியவா றேதரும மியற்றுகின்ற திடமதியும்
எவர்க்கும் இன்பே
பண்ணுகின்ற பெருங்குணமும் பாரபக்ஷ மில்லாத
பண்பும் இந்த
மண்ணிலெவர்க் கமையுமுமைப் பிரிந்தவெங்கள்
மனத்துயரம் வழுத்தற் பாற்றோ.

ஓம்

பரமாத்மனே நம:

தென் இந்திய ஜைன சகோதரர்கள் அவசியம் கவனிக்க வேண்டிய ஓர் விஷயம்.

சித்தாமூர் ஸ்வஸ்தி ஸ்ரீமன். லக்ஷ்மி சேனபட்டாரக சுவாமியார் அவர்கள் பரமபதமடைந்த விஷயம் யாவரும் அறிந்ததே. சுவாமி அவர்களால் ஜைன சமூகத்தாருக்கு இது வரையில் செய்து வந்த பல நன்மைகளோடு மேலும் செய்யவேண்டிய அநேக நன்மைகளும் கோவில் திருப்பணி முதலிய தர்ம கைங்கரியங்களும் எஞ்சியிருக்குமாறு, சுவாமிகள் இக்காலத்தில் பிரிந்துவிட்டது ஜைன சமூகத்தாருக்கே ஈடுசெய்ய முடியாத ஓர் பெருங்குறை நேர்ந்துவிட்டது. இதைப்பற்றி ஜைன சகோதரர்களுக்கு நேர்ந்திருக்கும் மனக்குறையானது அளவிலடங்காததாகும். அதனோடு இன்னும் நாம் மனக்கவலை யடையவேண்டிய ஓர் பெரிய விஷயமும் நேர்ந்திருக்கின்றது: அதாவது, சுவாமிகள் ஜீவதிசையோ டிருக்குங் காலத்திலேயே தங்களுடைய ஸ்தானத்திற்குத் தகுதியான வேறொருவரைக் குறிப்பிடாமல் போய்விட்டதே யாகும். இதைப்பற்றித்தான் ஜைன சமூகத்தார் பெரிதும் ஆலோசிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த ஸ்தானத்தை ஒருவர் ஏற்றுக் கொள்வதென்றால் அது சாமானியமான தன்று. அது பெரிய ஒரு பொறுப்பான ஸ்தானமாயிருக்கிறது. ஆதலால் அந்த ஸ்தானத்திற்கு இனி வருபவர் 40-வயதுக்கு மேற்பட்டவராயும், நம்மத சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவராயும், மடாலயத்தின் காரியாதிகளை நிர்வகிக்கத் தகுந்த சக்தியுடையவராயும், பாரபக்ஷமின்றி ஸ்ராவகர்களுக்கு அன்பு செலுத்தக் கூடியவராயும், பொதுநலப் பிரியராயும், ஜைன சமூகத்திற்குக் கல்வி அபிவிருத்தி செய்வதில் ஊக்கமுடையவராயும், நம்மதக் கிரந்தங்களை வெளிப்படுத்துவதில் சிரத்தை யுடையவராயும், மதோத்தாரணம் செய்வதில் தீவிர முயற்சி யுடையவராயும், தேவாலயங்கள் தருமசாலைகள் முதலியவைகளையும் மற்றுமுள்ள தரும காரியங்களையும் யதி தர்மத்தைக் கைக்கொண்டவர்களையும் அணுவிரதிகளையும் சிரத்தையுடன் ஆதரிக்கக் கூடியவராயும், ஏற்கனவே காலஞ்சென்ற சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையா யிருக்கும் தேவாலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்து வைக்கக்கூடியவராயும், மடத்துச் சொத்தைப் புண்ணிய

காரியங்களுக்கே உபயோகித்துப் பாதுகாத்து விருத்திசெய்யக் கூடியவராயும், ஸ்ராவகர்களுக்குள் எல்லோருக்குமே திருப்தியைத் தரக் கூடியவராயும் இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட அருமைக் குணங்களையுடைய ஒருவரைத் தேர்ந்தெடுப்பது, ஒருவர் இருவரால் இயலுங் காரியமன்று. ஜைன சமூகம் முழுவதுமே ஏகோபித்து ஒருவரைத் தீர்மானிக்க வேண்டும். அப்படித் தீர்மானிப்பதில், இவ்வளவு பெரிய குணங்களமைந்த ஒருவர் இருப்பாரோ என்று சிலர் சந்தேகிக்கலாம். அப்படிப்பட்ட மகான்கள் நம்மவர்களில் இல்லையென்று சொல்ல முடியாது. சிலர் இருக்கின்றனர். அவர்களுள் சிலர் இந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளும் நோக்கமுடையவராயும் இருக்கலாம், நோக்கமில்லாதவராயு மிருக்கலாம். அவர்கள் எப்படி யிருந்தபோதிலும் நாம் எல்லோரும் அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து வற்புறுத்திபாவது இந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்வது நம்முடைய கடமையா யிருக்கின்றது. அவ்வாறு செய்தால் மாத்திரந்தான் நம் நாட்டில் ஜைன தர்மம் நிலை நிற்கும்; நம்மதமும் விருத்தியடையும்; ஸ்ராவகர்களுக்கும் சிறப் புண்டாகும்; நிம்மதியான வாழ்க்கையு மேற்படும்; ஜைனர்களுக்கே எப்போதுமில்லாத பெரிய செல்வாக் குண்டாகும்.

இஃதிப்படியிருக்க இவ்விஷயமாக ஆரணியிலுள்ள சமஸ்த ஸ்ராவகர்களும், முதலூர், வில்லிவனம், தெள்ளார், அகர கொரக் கோட்டை, கொரக்கோட்டை, கூடலூர், தென்னாத்தூர் ஆகிய கிராமங்களிலுள்ள பல ஸ்ராவகர்களும் துண்டுப் பிரசுரங்கள் வெளிப் படுத்தியிருக்கிறார்கள். அவற்றை நாம் பார்த்ததில் "ஜைன சமூகத்தாரெல்லோரும் ஒன்றுசேர்ந்து நியமிக்கும் மடாதிபதியே அங்கீகரிக்கத் தக்கவ"ரென்றும், "யாரோ ஒரு சிலர்மாத்திரம் தங்கள் நோக்கம்போல் மடாதிபதியை நியமிப்பார்களேயானால் அவர்மற்ற ஜைனர்களால் அங்கீகரிக்கத் தக்கவரல்ல"வென்றும் சில வாக்கியங்கள் காணப்பட்டன. இவற்றை ஆராயும்போது ஜைன சமூக நோக்கத்திற்கு மாறாக அப்படியும் தங்கள் நோக்கம்போல் மடாதிபதியை நியமிக்கத்தக்க ஒரு கக்ஷியார் சிலர் ஏற்பட்டிருப்பார்களோவென்னும் சந்தேகத்திற் கிடமுண்டாகிறது. அப்படி யேற்படும் பக்ஷத்தில் கக்ஷி இரண்டாகிவிடும். பிரிவினை இரண்டாகுமேயானால் இந்தப் பெருங்காரியத்தில் பல இடையூறுகள் நேரும்; நம் நோக்கங்கள் நிறைவேறாமல் போகும்; பலவகையிலும் நமக்குக் கலக்கங்கள் ஏற்பட்டு சமூகம் க்ஷீணதசை யடைவதற்கு ஓர் ஏதுவுண்டாகிவிடும்

சகோதரர்களே! அத்தகைய தீங்குகளுக்கு நாம் இடங்கொடுத்து விடாமல், எல்லாக் கிராமவாசிகளும் ஒன்றுசேர்ந்து ஒரே மன நோக்கமுடையவர்களாய், இந்த மடாதிபதி ஸ்தானத்திற்குத் தகுதி யான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டும். இது மிக அவசரமும் முக்கியமுமான காரியமானதால் ஒவ்வொருவரும் நமக் கென்னவென்று அசிரத்தையா யிருந்துவிடாமல், இது பார்த்த க்ஷணத்திலேயே இக்காரியத்தில் கவனஞ்செலுத்தி ஒவ்வொரு கிராமத் திலும் தனித்தனியே சபைகூடி இவ்விஷயத்தைப் பற்றிப் பேசிக் குறிப்பிட்ட ஒருகாலத்தில் சித்தாமூரில் மகாநாடு கூடுகிறதென்று தீர்மானஞ்செய்து அதன்படியே சபைகூட்டி அதற்கு சகல ஸ்ரா வகர்களும் வந்திருந்து எல்லோரும் ஏகோபித்து ஒருவரை மடாதி பதியாகத் தீர்மானிக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மடாதிபதி அவர்களை நியமிப்பதோடுகூட முதலில் பஞ்சாயத்து நியமித்து மடத்தின் காரியாதிகளையும் மதத்தின் காரி யாதிகளையும் மடாதிபதி அவர்களும், பஞ்சாயத்தார்களும் கலந்து ஆலோசனைசெய்து நடத்தும்படிக்கான ஒரு ஏற்பாட்டையும் செய் யும்படிக்கும் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
பத்திராதிபர்.

மாணவர் பக்கம்

கல்வியின் பெருமை.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-2, பக்கம்-46)

அருந்தமிழ்த்தாயின் அருமைப் புதல்வர்காள்!

மாசறக் கற்றவர்களையும், காசினியை ஒரு குடையின் கீழி ருந்து அரசாளும் வேந்தர்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து,

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ்சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்—மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என்று, நம்முலக ஞானமாதாவாகிய "ஔவைப் பிராட்டியார்" விளம்பியுள நீதியால் மன்னனைவிடக் கற்றோன் சிறப்புடையோன் என்பது தெற்றென விளங்குகின்றது.

ஆதலின், அரிதினுமரிதாகிய இம்மானிட ஜன்மமெடுத்தவர்களாகிய நாம் "வித்தைவிரும்பு" என்று நம் அன்னை மூதாட்டியாரியம்பிய நீதியைக் கடைப்பிடித்து அதன்படியே "ஓதுவதொழியேல்" என்றுரைத்த அமுதவாக்கியத்தையும் அனுசரித்து "கல்வி"யை வாழ்நாளளவும் இடைவிடாது கற்கவேண்டும். இப்பெருஞ்சிறப்புற்ற கல்வியானது நம்மை விட்டகலாதிருக்குமாயின், மாதா, பிதா, மனைவி, மக்கள் முதலியவர்களாலனுபவிக்கும் இன்பமும், நாம் எத்திசைகட்குச் சென்றாலும் புகழும், கீர்த்தியும் நமக்குக் கிடைக்கும். இவ்வாறு கிடைக்கும் என்பதை,

"வித்தையே யுளமேதல்லதா பிதாவொடு பாரிவேண்டி
யுற்றிடுஞ் சுகத்தைக் காட்டுமுயர் திசையெங்குற் றாலு
மெத்தவும் புகழுண்டாகும் விரைமலர்த் திருகடாட்சம்
நித்திய முண்டாம்கற்ப விருட்சம்போல் நிறைந்தவித்தை"

என்னும் செய்யுளாலுணர்க.

மாணவர்களே! இவ்வனந்த வின்பங்களைத் தரக்கூடிய கல்வியில்லாது, நாடு, நகரம், மாடமாளிகை, கூடகோபுரம், தோப்புத் தடாகம், கழனி, ஆனை, குதிரை, மாடு முதலிய செல்வச்சிறப்புகளும், மாதா, பிதா, மனைவி, மக்கள், பந்து, மித்திரர் முதலியவர்களும், திரவியங்களு மிருந்தாலும் பயனில்லை. "கல்வி"யாகிய ஞானமில்லாதவர்கள் வாசனையற்ற முருக்கம்பூவை யொப்பார்கள். இதனை,

"தேசிக மிவ்வினங்கள் சிறந்தநற் கலன்கண் மிக்க
காசினி யிரதஞ்சொர்ணங் கரிபரி படைத்தாரேனும்
நேசமாம் வித்தையற்றால் நிறைந்திடு முருக்கம்பூப்போல்
வாசனை யிலாதுநின்று வயங்கிடு வாராமன்றோ?"

என்பதனாலறிக.

இன்னும், ஒருவன் கல்வியென்னும் கனியை யுண்டிருப்பானாயின் அவன் தாழ்ந்த குலத்தில் பிறந்தோனாயினும், அவனை அக்கல்வியானது மேம்பாடான இராஜ சமுகத்திற் சேர்த்துவிடும். இதனை,

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினு,
மக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பார்."

என்றும்,

"அறிவுடைய யொருவனை அரசனும் விரும்பும்"

என்றும், கல்விக்கடலென விளங்கிய அதிவீரராம பாண்டியர் இயம்பியவற்றாலுணர்க.

(இன்னும் வரும்.)

இங்ஙனம், தங்களன்புள்ள,
எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழ் நாவலன்.

தாய் நாடு.

தாய் நாடென்பது யாதெனில் ஒவ்வொரு சிருஷ்டிகள் ஜென்மித்த சொந்த நாடே, தத்தம் தாய் நாடெனக் கூறப்படும்.

அத் தாய் நாட்டிற்கும் அதில் ஜன்மித்த சிருஷ்டிகட்கும், தாய்க்கும் பிள்ளைக்கும் எவ்வித உரிமை யிருக்கிறதோ அவ்விதமே யாகும்.

அஃதெவ்வாறெனில், ஒரு ஏழைக் குடும்பத்தில் பிரசவித்த ஓர் குழந்தை தனது மழலைப் பருவத்தில் தன் மாதாவின் கஷ்ட திசையில் அன்னவள் அடையும் துயரை எவ்விதமாகவும் நிவர்த்திக்கச் சாத்தியப்படாது தானுமனுபவிக்க நேரிட்டபோதிலும், யௌவன பருவதிசை யடைந்து வியாபக விவகாரங்களில் தலையிட்டது முதல் தன் அன்னை யனுபவிக்கும் துயரை நிவர்த்தி பண்ணித் தானும் தன் மாதபிதா சுற்றத்தார் முதலியவர்களுடன் செல்வவளம் பெற்று அழியா மகிமையை உண்டு பண்ணுகிறான். இப்படியே ஒவ்வொருவரும் முயற்சிப்பது உலகப் பிறவிகட்கு உடந்தையான சகஜமே. இதுபோல தாய்நாட்டின் விஷயத்திலும் அன்பு செலுத்தவேண்டும்.

அத்தன்மையாகவே மேல்நாட்டார் தத்தம் தாய் நாடென்னும் மாதா அது தரிபட்டிருந்த க்ஷீண தசையிலிருந்து நீங்கி மங்காமகிமை புனைந்து பிரகாசிக்குமாறு விவசாயம் கைத்தொழில் வர்த்தகம், என்னும் இம்மூன்று அரிய அற்புத மாணிக்கங்களைக் கைக்கொண்டு நாளடைவில் அதனை விருத்திக்குக்கொண்டு வந்தது மன்னியில் அன்னிய நாட்டிலும் அதன் கௌரவத்தை நிலைநாட்டி விட்டார்கள். இன்னவர்கள் நமது வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் அம்சங்களையுடையவர்களே யன்னியில் வேறெவ்வித நூதன அம்சங்களையுடையவர்களில்லை. ஆனால் அவர்களின் விடாமுயற்சியும் அறிவின் மகிமையும் தான் எண்ணரிய நூதன கருவிகளையும், நம் நாட்டார் ஆச்சரியப்படக்கூடிய அநேக விஷயங்களையும் உற்பத்தி செய்ய ஏதுவா யிருந்திருக்கின்றன.

ஆனால் நம் முன்னோர்களோ, ஆன்மசக்தி யெனும் ஓர் கருவியை மட்டும் கையாண்டு இன்னவர் சாதித்தைப் பார்க்கிலும் பன்மடங்கு மேலிட்ட கருமங்களை யெல்லாம் சாதித் திருக்கிறார்களென்பதை வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டப் புராதன நூல்களே சாக்ஷி.

அன்னவர்களும் நம்மைச் சார்ந்தவர்களே யல்லாது பிறிதில்லை. இன்னும் சிருஷ்டி கர்த்தா நம்மை என்ன உருவத்தில் வகுத்திருக்கிறாரோ? அதே வண்ணத்திலேயே அன்னவர்களையும் வகுத்தார். அவர்கள் ஏன் உன்னத நிலைமை யடைந்தார்க ளென்றிலையா? அறிவின் பிரகாசத்தைக் கொண்டே. இவ்வறிவெனும் சக்தி கடவுளால் அமைக்கப்பட்டு மானிடர்கள் யாவரிடத்திலும் பதிந்திருக்கிறது. அச்சக்தியைப் பிரகாசிக்கச் செய்பவர்களே இம்மையில் தாமும், தம் மதமும், தம் தாய் நாடும் சீர்திருத்த மடையச்செய்தும் மறுமையில் மோக்ஷப்பதி யடைந்து மிருக்கிறார்கள். உதாரணமாய் தருமர், ஸ்ரீ ராமர், அரிச்சந்திரர், விக்கிரமாதித்தர் போன்றவர்கள் விளங்குகிறார்கள். இன்னவர்கள் பரோபகாரத்துக்காகத் தமது ப்ராணனையே தியாகம் செய்யத் துணிந்தவர்களெனக் கூறமுன்னூற்களாகிய சரித்திரங்களே சாக்ஷி.

இவ்வாறு கடவுள் இக்கடல் சூழ்ந்த பூவுலகில் சிருஷ்டித்த ஜீவாத்துமாக்களில் மானிடமாகிய நரஜன்மத்தையே மேன்மையாக அமைத்திருக்கிறார். அத்துடன் எந்த ஜீவனும் அடையாத பகுத்தறிவெனும் ஓர் குணத்தை அதற்குக் கொடுத்து நன்மையின்னது தீமையின்னதென "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" விளக்கிக்காட்டி யிருக்கிறார். ஆகவே நாம் அவரால் உரிமையாக்கப்பட்டதைக் கைக்கொண்டும், விலக்கப்பட்டதைத் தவிர்ந்தும் ஆன்மசுத்தி யடைந்து அறம் எனும் வித்தை விதைத்து அந்தியத்தில் அவ்வுலகத்தில் அதின் பலனை யநுபவித்தும், நமது ஜீவியத்திற்குப் பின் இவ்வுலகில் நமது நாமம் மங்காதிருக்கக் கூடிய அளவு தாய் நாடு நம்மதம் முதலிய பொதுநல விஷயத்தில் நிரந்தர தருமம் புரிவது நமது கடமை. இக்கடமையைக் கையாண்ட மஹான்களே மேதாவிகள். அதல்லாது வீண்காலம் கழித்துத் தாமும், தம் மதமும், தம் தாய் நாடும் தாழும்படி பழிப்புக்கிடம் கொடுப்பவர்கள் மூட்டுப் பூச்சிபோல் பிறந்தும் பிறவாதவரே யாவர்.

ஆதலின், எனதாருயிர் நேயர்களே!

நாமும், நம் தாய் நாடும், சீர்திருத்த மடையக்கூடிய விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், முதலியவைகளைச் செய்யுமாறு கல்விவான்கள் நற்போதனைகளையும், நமது முன்னோர்களின் பெருமை முதலியவைகளையும் எடுத்துக்கூறி, கல்லாதவர்களும் அறிவு பெறும்படி அனந்த நூல்களை இயற்றி அழியாப் புகழடைவதுடன்,

இதனைக் கண்ணுறும் ஏனையோரும் நன்மை பயக்கும் இவ்விஷயங்களில் உபகரிக்க வேண்டியது அவர்களின் கடமையாம்.

தனவந்தர்கள், தங்கள் செல்வப் பொருளினால் தத்தம் இயல்புக்கேன்றவாறு பரோபகாரமாய் ஏழைகள் முதலியவர்களை ஆதரித்து அன்னவர்களின் பாலர்களைக் கல்வி பயிற்றவும், எளிய பெண்களுக்கு மாங்கல்யதாரணம் செய்விக்கவும், பொது நலங்களைக் கவனித்துப் பாமரர்களுக்கு அறிவைப் படித்துக் கொடுக்கவும், பேதைகளுக்குப் புத்தியைக் கற்பிக்கவும், கல்விமான்களின் கல்வி ஓங்கி வளரவும், செல்வவான்களின் செல்வம் நல்வழியில் பயன்படவும், அவரவர் மதம் துலங்கவும், (சங்கம்) எனும் ஒற்றுமைச் சபையைக் கூட்டி அதின் மூலமாய் நம் தாய் நாடு புராதன காலத்தில் அடைந்த மங்காமாட்சியை மீண்டும்பெறச் செய்யவும் எல்லாம் வல்ல இறைவனாகிய பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக. இங்ஙனம்:

M. N. M இபுருகீம்,
விண்ணப்புறை.

செல்வம்.

(138-ம் பக்கத்தொடர்ச்சி, சஞ்சிகை-6.)

"நாரூத்தகடேபோல நன்மலர்மேற் பொற்பாவாய்
நீரூய் நிலத்து வினியரோ—வேரூய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து"

என்று மேலோர் கூறியதுபோல் இச்செல்வமானது தீயவர்பால் வந்து அடைகின்றது. இவர்கள் இச்செல்வத்தைப் பெற்றதும் இறுமாந்து செல்வச் செருக்குடையராய்க் கைகால் தெரியாது தத்தம் மனதிற்குத் தோன்றியதைச் செய்யுந் தீச்செயற்களுக்கு அளவேயில்லை.

"உயிர்க்கொலை புரிதலுண்ணு முணவுமாறூட்டஞ் செய்த
லயிர்ப்பிலா நண்பர்மாட்டு மமைதரக் குய்யஞ்செய்தல்
பயிர்ப்புமிக் குறநல்லோரைப் பழித்தல்பொய்க் கரியுரைத்தல்
செயிர்ப்பிலா லயத்துஞ்சென்று பட்டிமையி யற்றல்."

முதலியவற்றையெல்லாம் செய்வர்.

இன்னும் இச்செல்வத்தைக் கைக்கொண்டவர்களில் பெரும்பாலோர் யோக்கியர்களை அயோக்கியர்கள் என்றும், தீயோர்களைத்

20458

தூயோர்கள் என்றும் சொல்லித்திரிவர். கற்புள்ள மாதரைக் கற்பழிக்க நினைத்தும் பொருளை நாசஞ்செய்வார்கள். இன்னும் கணக்கற்ற தீங்குகளைச் செய்வார்கள். இதை நோக்கியல்லவோ,

"ஒல்லொழுக் கினரைத்திய வொழுக்கரென் றுரைக்கச்செய்யும்
புல்லொழுக் கினரைத்தூய புலத்தரென் றுரைக்கச் செய்யும்
நல்லகற் புடையமாதர் நலத்தையஞ் சாமைசெய்யும்
பல்வகைத் துயருஞ்செய்யும் பாழ்ம்பொருள் பற்றுளார்க்கே."

என்று தவசிங்கமாகிய குசேலர் தம்மனைவியிடங் கூறினர். இன்னும்,

"சிறியரே மதிக்குமிந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளார் மூகராவர்
பறிபணி செவியுளாரும் பயிறரும் செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே."

என்றவாறு.

இச்செல்வர்களிடம் ஏழைகள்வந்து அன்புடன் எதிர்நோக்கித் தத்தம் குறைகளைச்செப்பி இரந்துநிற்பின், இவர்கள் காதுகேட்காதுபோலும், கண் தெரியாதவரைப் போன்றும், வாயில்லா ஊமையைப்போன்றும் மமதையாகச் செல்வச்செருக்கில் ஆழ்ந்து கிடப்பர்.

"கண்ணிற் சொலிச் செவியி னோக்குமிறை மாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு." என்றவாறு சுற்றத்தார்களைப் பாதுகாக்காத அரச சம்பத்து வீணாகும்.

"ஒருசிறு தருமமேனுமுளுற்றிடா ரிரப்போர்வந்து
தருநிகர் காத்தாயென்று சாற்றினுங் கொள்ளாராகிக்
கருணைசற் றின்றியெல்லை கடந்திடத் துரந்துமீள்வர்
மருவுபல் கிளையுமோம்பார் வளம்படைத் தென்பெற்றாரால்."

என்றவாறு செல்வர்களாகிய இவர்களைப் புகழ்ந்துரைத்தாலும் இவர்கள் மனமிளகாது; ஆனால் தூயவர்கள் சகாயத்தால் தாசிகளுக்கும், வீண்டாம்பீகத்திற்கும் கொடுத்து நாசமடைவார்கள். மற்றும்,

"செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்

வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்."

என்றபடி செல்வத்தை அடைந்ததும் தங்கள் மனம்போனபவாறே நடப்பர். இச்செல்வத்தை அடைவதற்குப் பலர் சொல்லொணுக் கொலையும் புரிகின்றார்கள் என்பது கண்கூடு. இன்னும்,

"உண்ணான் ஒளிநிறுனோங்குபுகழ் செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களைபான்—கொன்னே
வழங்கான் பொருள் காத்திருப்பானேல் அ ஆ
விழந்தானென் றெண்ணப்படும்." என்றபடி தாம் உண்ணாமலும், பெருங்கீர்த்தி யடையாமலும், சுற்றத்தார்கள் துன்பங்களை யாதும், தானதர்மங்கள் செய்யாதும் பணத்தைச் சேர்த்துவைத்து உயிர் துறக்கின்றனர். இவர்கள்,

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டே
ஆவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகாளந்தப் பணம்."

"தனந்தேடி உண்ணுமற் புதைக்கவேண்டாம்"
"செல்வர்க்கழகு செழுங்கிளைத்தாங்குதல்." என்னும் நீதிப் பாக்களை மறந்தார்கள்போலும். இன்னும்,

"இவைமுதற் பலவு மாந்தரிபற்றி நாள்கழிபா நிற்ப
ரவையெலாம் பொருணிமித்த மாகுமப்பொருளைப்பெற்றார்
குவையுறப் புதைத்துவைத்துக் குதுகுதுப்படைந்துகாத்து
நவையுறு பணப்பேயென்னு நாமமும் பெறுவர்..." இதை

நோக்கியல்லவா குசேலர்தம் மனைவிக்கு இவர்களைப் பணங்காக்கும் பேய் என்று கூறினர். இன்னும் இவர்கள் தங்கள் பொருள்களைத் தமது சுற்றத்தார்களுக்கும் அரசன்கோபத்திற்கும் கள்ளர்களுக்கும் மறைத்து வைத்திருக்கின்றார்கள். இதைப் பற்றியல்லவோ,

"பொருவறுபந்தமெல்லாம் புணர்ந்திடும் தெய்வச்சிந்தை
ஒருவிமேலிட்டுநிற்கும் உறக்கமும் இறக்கச்செய்யும்
கருவினுட்புகுத்தும் இன்ன கரிசு கண்டதனலன்றோ
இருநிலத்தினில் வெறுக்கை என்மனர் புலமை சான்றோர்."

"குறைதவிர் கொடுங்கோன்மன்னர் முனிவிற்கு நனியும் அச்சம்
கறைகெழு களவு செய்வார் கரத்தற்கும் அழற்கும் அச்சம்

மறைவருதாயமாக்கள் வெளவுவர் என்றும் அச்சம்
அறைபொருள் பெற்றாரல்லர் அச்சமே பெற்றார் போலும்."

என்று மேலோர்கள் கூறினார்கள்.

தேன் ஈக்கள் பூத்தோறுஞ்சென்று சிறிதுசிறிதாகச் சேர்த்து வைத்த தேனை ஒருநாளில் பிறனொருவன் எடுத்துக் கொண்டு போவதுபோல, பலநாளாக ஈயாது சேர்த்துவைத்த செல்வக் குவியலை ஒரு காலத்தில் கள்ளர் முதலிய தீயோர்கள் கொண்டுபோவார்கள் என்பதிற்கையமில்லை. இதற்காகவே மேலோர்,

" உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ்செய்யார்—கொடாஅது
வைத்திட்டினாரிழப்பர்..........................
உய்த்திட்டுந் தேனீக்கரி." என்று கூறினார்போலும்.

இவர்கள் "ஈயார் தேட்டைத் தீயார்கொள்வர்," "பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவியாக்குபவர் பேறாம்" என்னும் நீதிகளை மறந்தனர் போலும். ஓரிடத்தில் குசேலர் தம் மனைவியிடம் " துன்பச்செல்வமோ நண்ணுவேன்பாசன் " என்று செல்வத்தைத் துன்பத்திற்கு ஒப்பிட்டிருக்கிறார். இன்னொரு இடத்தில் நளமகாராஜன் "செல்வர்கள்பால் சென்று யாசித்து உயிருடனிருத்தலால் முடிவில்லாத அவமானம் வரும். பலங்குறையும் அறிவு கல்வி ஆகிய இவைகள் வீணாகிப்போம்" என்று கூறியுளான். இதனால் இவர்கள் செல்வத்தை வெறுத்து இருக்கின்றனர் என்பது நன்கு விளங்குகின்றது. "வறியவர் செல்வராவர் செல்வர் பின் வறியராவர்." என்னும் முதுமொழி கவனிக்கத்தக்கது. இனி இச் செல்வ நிலையாமையைப் பற்றி ஆராய்வோம்.

(தொடரும்)

எஸ். என். இராமு,
கூறைநாடு.

செய்யுட் கதைகள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-12, பக்கம்-272)

அறஞ்செய விரும்பு.

ஒளவையார் இருந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறினோமன்றோ? அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஊரார் எல்லாரும் ஏகோபித்து 'ஒளவைக்கூடம்' (ஒளவையார் பள்ளிக்கூடம்) என்று பெயரிட்டனர்.

பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்ட மறுதினம், பாட்டியார் பள்ளிக்கூடத்திற்குப் போனார். போய், எல்லாருடன் கூடி, ஆத்தி சூடி அமர்ந்த தேவனை ஏத்தியேத்தித் தொழுதனர். பின்னர், அவர் குழந்தைகளை நோக்கி, "குழந்தைகாள்! இது நமது பள்ளிக்கூடம் ஏற்படுத்திய இரண்டாவது தினம் அல்லவா?

"இங்கப் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்ததும், எனக்கு வேறொரு பெரிய பள்ளிக்கூடத்தைப் பற்றிய ஞாபகம் வருகிறது. அப் பள்ளிக்கூடத்தில் லக்ஷக்கணக்கான வகுப்புகள் இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் முக்கியமான ஏழு வகுப்புக்களாகப் பிரிக்கலாம். அவைகளுக்கு முறையே தாவர வகுப்பு என்றும், நீர் வாழும் வகுப்பு என்றும், ஊர்வன வகுப்பு என்றும், பறவை வகுப்பு என்றும், விலங்கு வகுப்பு என்றும், மானிட வகுப்பு என்றும், தேவர் வகுப்பு என்றும் பெயர்.

இவ் வகுப்புகள் ஏழுக்கும் ஒரே ஒரு உபாத்தியயர்தான் இருக்கிறார். அவருக்குத்தான் 'கடவுள்' என்று பெயர். செடி கொடி முதலிய தாவரங்கள் எல்லாம் தாவர வகுப்பாகிய முதல் வகுப்பைச் சேர்ந்தவை. மீன், திமிங்கிலம் முதலிய நீர்வாழும் பிராணிகள் எல்லாம் இரண்டாவது வகுப்பாகிய நீர்வாழும் வகுப்பைச் சேர்ந்தன. பாம்பு, பல்லி, கரையான் முதலிய ஊரும் ஜந்துக்கள் யாவும் மூன்றாவது வகுப்பு ஆன ஊர்வன வகுப்பைச் சேர்ந்தவை. காக்கை, குருவி, கழுகு முதலிய பறப்பன வெல்லாம் நான்காவது வகுப்பாகிய பறவை வகுப்பையும், மிருகங்கள் யாவும் ஐந்தாவது ஆன விலங்கு வகுப்பையும், மக்கள் யாவரும் ஆறாவது வகுப்பாகிய மானிட வகுப்பையும், தேவர்கள் யாரும் கடைசியும், ஏழாவதும் ஆன தேவர் வகுப்பையும் சேர்ந்தவர்கள்.

ஆறாவது வகுப்பில் வாசிக்கும் ஓர் மாணவன் முதல் ஐந்து வகுப்புக்களும் வாசித்துத் தானே இருக்கவேண்டும்! அது போலவே, ஆறாவது வகுப்பாகிய மானிடப் பிறப்பைச் சேர்ந்த நாம், இம்மானிடப் பிறப்பினைப் பெறுவதற்கு முன்னால், தாவரம, நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய ஐந்து பிறப்புங்களை அடைந்திருக்க வேண்டுமல்லவா? ஒவ்வொரு பிறப்பிலும், லக்ஷக்கணக்கான தடவைகள் பிறந்து, பிறந்து-இறந்து, இறந்து, முடிவில் அடைவதற்கு அருமையான இம்மானிடப் பிறப்பை அடைந்திருக்கிறோம். இனி, நமக்கு முன்னால் இருப்பது, ஏழாவது பிறப்பாகிய தேவர் பிறப்பு. (இன்னும் வரும்)

லால்குடி சே. கந்தசாமி,
தமிழ் ஆசிரியன்,
குடியாத்தம்,
(வட ஆற்காடு ஜில்லா.)

ஸ்ரீ குந்தகுந்த ஆச்சிரமம்.

நிகழும் ஹூ வைகாசிமீ 30உ குருவாரம் விருஷப லக்னத்தில் பொன்னூர் ஸ்ரீமத் ஹேளாசாரிய ஸ்வாமிகளின் மலையடிவாரத்தில், ஆராநகரத்திலிருந்து நம் தேசத்திற்கு விஜயம் செய்திருக்கும் ஸ்ரீமான் பாபு தரணேந்திரதாஸ் அவர்களால் ஸ்ரீ குந்தகுந்த ஆஸ்ரமம் என்கிற யதிவாசநிலைய திருவிழா கொண்டாடப்பட்டது. இதைப் பற்றி விரிவான விஷயம் அடுத்த சஞ்சிகையில் வெளியிடுகிறோம்.

பத்திராதிபர்.

210458 Chennai-600 005.

மதிப்புரை

ஸ்ரீலலிதா நவரத்தினமென்னும் மனையடி சாஸ்திரம்:—இத்தலைப்பெயரமைந்த அரிய நூலொன்று நம் பார்வைக்கனுப்பப்பட்டிருக்கிறது. இது, புலிவலம் R. கோபாலய்யரவர்களால் எழுதப்பட்டது. இதில், மானிடவர்க்கத்தார், தங்கள் தங்களுக்குரிய வாசஸ்தானங்களை ஏற்படுத்திக் கொள்ளத்தகுந்த பற்பல விதிகள் சாஸ்திரோக்தமாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. மனைதொடங்கவேண்டிய காலம், இடம், மனையின் அளவு, அமைப்பு, பலாபலன்கள் முதலிய பலவிவரங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. விரிவான பல சிற்பசாஸ்திரங்களின் ஆராய்ச்சியின்மேல் இந்நூல் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எளிய தமிழ்நடையில் இயற்றப்பட்டிருக்கிறது. இதிற்சொல்லிய கிரமப்படி நகரம், ஆலயம், கிருகம் முதலியவற்றை ஏற்படுத்தினால் பற்பல நற்பயன்களை உண்டாகும். ஆதலின் இது ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாததாம். இந்நூல் வேண்டுவோர், "R. கோபாலய்யர், புலிவலம் கிராமம், விஜயபுரம்போஸ்டு" என்னும் விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை அணு 9.

பத்திராதிபர்.

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயா விநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திர ஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயா முயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக்கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளை யெல்லாம் கைப்பற்றிக் கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புரத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா-6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பல கதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில். தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற் புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப் பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசை பெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப் பிடித்த கதை, நெளிகொடுத்த கதை, செருக்கால் சீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப் பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச் சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும் போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப் புலவர் கதை, பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக் கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையான வேலை எஜமான் இன்னுரொன்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப் கிப்படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்புள்ள நாவல். நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது.

விலை அணா 10.

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது. விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதில் படித்துணரத் தக்கது. விலை அணா 4.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப்பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி இலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு, முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா-5

தருமசீலன் புக்டிபோ.

1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

மனையடி சாஸ்திரம்.

சௌக்கியமாகவும் சம்பத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கிரந்தம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் உள்ளவைகளை தமிழில் எளியவசன நடையில் புலிவலம் ஆர். கோபால அய்யரால் எழுதப்பட்டது. மேற்படி 1-ம் பாகம் விலை ரூபா 1. மேற்படி 2-ம்பாகம் அணா 9. குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8. விருக்ஷாதி சம்ரக்ஷண சாஸ்திர தீபிகை அணா 8. கீழ்கண்ட விலாசத்திற் கெழுதவும்.

ஆர். கோபாலய்யர்,
புலிவலம்
விஜயபுரம் போஸ்டு,
தஞ்சாவூர் ஜில்லா.